[4th March 1955

SRI S. RAMALINGAM :—" தடுப்புக் காவல் சட்டம் நீடிக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காரை ஏதாவது யோசனை கேட்டு கடிதம் வந்திருக்கிறதா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" அந்தக் கடிதத்தைப் பற்றிதான் கனம் அங்கத்தினர் ஸ்ரீ பழனிசாமியும் கேட்டிருக்கிறார்கள். அதே கேள்வியைத்தான் கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமலிங்கமும் கேட்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்ன பதிலையேதான் இப்பொழுது திருப்பிச்சொல்லவேண்டும்."

SRI S. SWAYAMPRAKASAM :—" There are two clauses in the question. It may not be in the public interest to answer clause (b) which enquires about the nature of the communication. But what is the objection to answering clause (a) which asks whether the Government received any communication from the Central Government?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" If the hon. Member is satisfied with that information only, I may say that we received a communication."

* 1094 Q.—SRI N. K. PALANISAMY :—" I request that this question may be taken up to-morrow."

MR. SPEAKER :—" Yes."

Scholarships to students of Backward Classes.

* 1095 Q.—SRI K. ARANGANATHAN : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state whether the Government have received applications for residential and non-residential scholarships from the students belonging to Backward Classes during 1954–55?

THE HON. SRI B. PARAMESWARAN :—" Applications for scholarships were received by the Director of Harijan Welfare."

SRI K. ARANGANATHAN :—" May I know the number of applications received and the number of applications sanctioned?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" We placed an additional amount at the disposal of the Director of Harijan Welfare and scholarships are now being granted. It will not be possible for me to give the exact number now. Final figures will be available only after two weeks."

SRI K. VINAYAKAM :—" What is the amount of the additional allotment?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" Fifty thousand rupees."

SRI A. GOVINDASWAMY NAYAGAR :—" ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் வேண்டுமென்று மனுச் செய்து கொண்டவர்களுக்கு ரெஸிடென்ஷியல் அல்லாத ஸ்காலர்ஷிப்தான் கொடுத்திருக்கிறார்கள். அதனால் பல மாணவர்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுக்க சர்க்கார் உத்தரவிடுவார்களா ?"

4th March 1955]

THE HON. SRI B. PARAMESWARAN :—" எந்தெந்த மாணவர்கள் தகுதி வாய்ந்தவர்களாக இருக்கிறார்களோ அந்தந்த மாணவர்கள் ஏழைமை நிலையில் இருக்கிறார்களோ அதையெல்லாம் உத்தேசித்து ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டுவருகின்றன."

SRI A. RATNAM :—" தாழ்த்தப்பட்ட ஜாதிகளில் சக்கிலிய ஜாதியினர் உண்மையாகவே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற ஜாதியானபடியால் . . ."

MR. SPEAKER :—" பிற்பட்ட வகுப்பினர் வேறு ; ஷெட்யூல் வகுப்பினர் வேறு."

SRI K. VINAYAKAM :—" Is the Hon. Minister aware that some applications from backward classes are still pending and will the Government be pleased to allot more funds so as to permit the sanctioning of all the deserving applications? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" The Director of Harijan Welfare hopes to cover all applications. If, however, some applications still remain, they could be considered only next year. The ways and means position of the Government is slender and therefore we cannot consider the question of an additional allotment this year."

SRIMATHI DR. T. S. SOUNDARAM RAMACHANDRAN :—" ஸ்காலர்ஷிப் வேண்டுமென்று மனுச்செய்துகொண்ட பிற்பட்ட வகுப்பினர்கள் எல்லோருக்கும் வசதிசெய்து கொடுப்பதற்கு சர்க்காரிடம் போதிய பணம் இல்லையென்று மந்திரி அவர்கள் பதில் சொன்னார்கள். பிற்போக்கு வகுப்பார்களிலேயே மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கும் வண்ணார், நாவிதர், குயவர் ஆகியவர்கள் விஷயத்தில் சர்க்கார் முதலில் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்ற யோசனையை மந்திரி அவர்கள் ஒத்துக் கொள்வார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" அப்படிக் கொடுக்கும் படியாகத்தான் உத்தரவு போட்டிருக்கிறோம். அதில் ஏதாவது தப்பிதம் இருந்தால் நான் அதைப் பரிசீலனை செய்கின்றேன்."

SRI V. MUTHU :—" பிற்பட்ட வகுப்பினர்களிலேயே உள்ள முற்போக்கினர் மறைமுகமாக கிராண்டு வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது என்ற புகார் இருந்துகொண்டேயிருக்கிறது. புது 'அலாட்மெண்டில்' ஆவது இவ்விஷயம் கவனிக்கப்பட்டு உண்மையிலேயே பிற்போக்கினர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" பிற்பட்ட வகுப்பினர் கமிஷன் ரிபோர்ட் இன்னும் இரண்டொரு மாதங்களில் வந்துவிடும். எந்த வகுப்பினர்கள் பிற்பட்டவர்கள் எந்த வகுப்பினர்கள் முற்பட்டவர்கள் என்றெல்லாம் அவர்கள் நிர்ணயம் செய்து ரிபோர்ட் சமர்ப்பித்துவிடுவார்கள். அவர்களுடைய ரிபோர்டை அனுசரித்து ஸ்காலர்ஷிப் கொடுக்க ஏற்பாடுகள் செய்வோம்."

SRI A. IYANAR :—" தற்போது சர்க்கார் பிற்பட்ட மாணவர்களுக்குக் கொடுத்துவரும் உதவி கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் கிடைக்கிறது. பத்தாம் வகுப்புக்குறைந்து படிக்கும் மாணவர்களுக்கு ரெசிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவது இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு சர்க்கார் உத்தரவிடுவார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" ரெசிடென்ஷியல் ஸ்காலர் ஷிப்புகள் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் படிவம் வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிப்பதற்கு

[4th March 1955

அரசாங்கத்தார் இப்போது பட்ஜெட்டில் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். நான்காவது பாரத்திலிருந்து ஆறாவது பாரம் வரையில் படிக்கும் மாணவர்களுக்கு அரைச் சம்பளச் சலுகை இருக்கிறது. அந்த அரைச் சம்பளமும் இல்லாமல் செய்யவேண்டுமென்ற யோசனையை இப்பொழுது கவனிப்பதற்கில்லை."

SRI S. PANCHAKSHARAM :—" The problem of backward classes is so big that I think it will be better if the Government prepare a list of forward classes and publish it. Will the Government consider this suggestion."

THE HON. SRI B. PARAMESWARAN :—" The task of classifying the people into backward and forward classes is assigned to the Backward Classes Commission. This Government cannot take up that responsibility."

SRI S. SWAYAMPRAKASAM :—" Generally residential scholarships are granted to students who, in the hope of getting scholarship get into the hostel and spend their own money. The Minister, says that an additional allotment has been made only now, that is towards the end of the year. With the limited resources, the Government are not able to sanction all the applications. So may I request the Government to see that students, who get scholarship, get it within three months of the re-opening of colleges? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" I shall make the necessary arrangement."

Advance grant to the South Kanara District Board.

* 1096 *Q.*—SRI M. NARAYANAN NAMBIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received a representation, dated 3rd December 1954, from the President, South Kanara District Board, for the sanction of an advance grant of Rs. 2,88,000 to the Board; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" (*a*) Yes, Sir.

" (*b*) An advance grant of Rs. 50,000 has been sanctioned to the District Board."

SRI T. ANANTA PAI :—" The financial position of district boards is very bad and the salary of the staff is not being paid in time, because they have to carry on with a deficit for a long time. Will the Government constitute immediately a committee to go into the question of deficits of local bodies and take steps to cover the deficits, as local bodies cannot carry on with a deficit like the State or the Central Government? "

THE HON. SRI S. S. RAMASAMY PADAYACHI :—" There is no need for constituting a committee, as the Government are considering how best the district board could be helped."